<u>சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்</u>
**<u>OS.No. 1085 / 2022</u>**

வா.சா.1. கருப்புச்சாமி 04.03.2025

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:

இந்த வழக்கை என்னுடைய முறையில் தண்ணீர் எடுத்து பாய்ச்சுவதற்கு மின்சாரத்தை தடைசெய்ததால் அதனால் தென்னைமரங்கள் பட்டு போனதால் இழப்பீடு கேட்டு நான் இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளேன். சர்வே எண்.841, 831/3, 840/1, 840/2, 840/3, 840/4, 838/1 ஆகிய சர்வேஎண்களில் எனக்கு ஒதுங்கிய பாகம் சுமார் 5 1/2 ஏக்கருக்கு மேல் இருக்கும். 1977-ம் ஆண்டு ஏற்பட்ட பாக பிரிவினையின் அடிப்படையில் தான் நானும் மற்ற பாகஸ்தர்களும் அவரவர்கள் சொத்துக்களை அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். சர்வே எண்.841/1 கிணற்றில் இருந்து தென்வடலாகவும் கிழமேலாக போகும் பாதை 2 முழம் அகலத்தில் பாதை செல்கிறது என்று பாக ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1977-ம் ஆண்டு பாக பிரிவினை பத்திரத்தில் சர்வே எண்.841/1 கிணற்றில் இருந்து தென்வடலாகவும் கிழமேலாகவும் போகும் பாதை 2 முழம் அகலம் தான் உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் அதை ஒப்புக்கொண்டு தான் நான் இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1977-ம் ஆண்டு பாகபிரிவினை ஆவணத்தை நான் இந்த வழக்கில் எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு ஞாபகமில்லை. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் 1977-ம் ஆண்டு பாகபிரிவினை ஆவணம் தாக்கல் செய்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. 1977-ம் ஆண்டு பாக பிரிவினை ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் உண்மை நிலவரம் தெரிய வந்துவிடும் என்பதால் தான் அதை வேண்டுமென்றே தாக்கல் செய்யாமல் மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அ.வ.எண்.237/2002 வழக்கில் பிரதிவாதிகளுக்கு எதிராக ஒருதலைப்பட்சமான தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கில் பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜராகாமல் ஒருதலைப்பட்சமாக தீர்ப்பாக வழங்கப்பட்டது என்றால் சரிதான். பிரதிவாதிகள் தாவா கிணற்றை அனுபவிக்க விடாமல் இடையூறு செய்தது குறித்து நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. ஆனால் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அ.வ.எண்.237/2002 வழக்கின் தீர்ப்பாணைக்கு பின்னிட்டு பிரதிவாதி அந்த கிணற்றை அனுபவிப்பதற்கு இடையூறு செய்தது குறித்தும் அந்த வழக்கில் நிறைவேற்று மனு தாக்கல் செய்து நடவடிக்கை எடுத்தேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. பொதுமனிதர்கள் வைத்து அவர்கள் பேசி காலதாமதப்படுத்தினார்கள். (சாட்சி தற்போது மாற்றி இரண்டு நபர்களும் பொதுமனிதர்களை வைத்து பேசியதால் மனு தாக்கல்

செய்யவில்லை என்று சாட்சியம் அளிக்கிறார்) இரண்டு நபர்களும் பொதுமனிதர்களை வைத்து பேசியதால் காலதாமம் ஏற்பட்டதாக சொல்லும் நான் இதை காரணமாக வைத்து நிறைவேற்று மனு தாக்கல் செய்திருக்கலாம் என்றும் வழக்கிற்காக வேண்டி பொது மனிதர்களை வைத்து பேசியதால் நிறைவேற்று மனு தாக்கல் செய்யவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நானும் பிரதிவாதியும் 2003-ம் ஆண்டில் இருந்து 2011-ம் ஆண்டு வரை பேச்சுவார்த்தை நடத்தினோம். நிறைவேற்று மனு தாக்கல் செய்வதற்கு ஒரு வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையை நிறைவேற்றுவதற்கு 12 வருடம் கால அவகாசம் உள்ளது என்றும் ஆனால் அந்த வழக்கில் பிறப்பிக்கப்பட்டட தீர்ப்பாணையை நிறைவேற்றாமல் விட்டுவிட்டு அதை மறைப்பதற்காகஇந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பிராதில் 841/1-ல் உள்ள கிணற்றில் ஆழப்படுத்தும் பொழுது அது பாறையாக இருந்தது என்று நான் பிராதில் சொல்லியுள்ள சங்கதிளை நிரூபணம் செய்வதற்கு புகைப்படம் எடுத்தேனா என்றால் கிணற்றில் தண்ணீர் இருந்ததால் புகைப்படம் எடுக்க முடியவில்லை. சர்வே எண்.841, 831/3, 840/1, 840/2, 840/3, 840/4, 838/1 ஆகிய சர்வே எண்களிலும் தென்னைமரங்கள் இருந்ததை நிரூபணம் செய்வதற்கு நான் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் அடங்கல் கணக்கு, புகைப்படங்கள் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள பிராது மற்றும் பிரமாண பத்திரிக்கையில் தாவா சொத்துக்களில் எந்த தேதியில் தென்னைமரங்கள் நடவு செய்யப்பட்டது என்றும் அவைகளின் வயது என்ன என்றும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்களில் தென்னைமரங்கள் வைப்பதற்காக தென்னங்கன்றுகளை வாங்கியதற்கான ரசீதை தாக்கல் செய்தேனா என்றால் அதற்குண்டான ரசீதை பெற்று இருந்தேன். வழக்கு 2019-ம் ஆண்டு தாக்கல் செய்த போது அந்த ரசீது தொலைந்து போகிவிட்டது. நான் தென்னங்கன்றுகளை கடையில் இரசீதுடன் வாங்கினேன் என்றும் அது தொலைந்துவிட்டது என்றும் நான் பிராதிலும் பிரமாண பத்திரிக்கையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் விபரம் சொல்லி தான் எனது வழக்கிறஞர் பிரதிவாதிக்கு 17.02.2018-ம் தேதி அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அதில் 250 தென்னைமரங்கள் தான் காய்ந்து போகியிருந்து என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அப்போது 250 தென்னை மரங்கள் காய்ந்து போய் இருந்தது. அதனால் அறிவிப்பில் 250 தென்னை மரங்கள் என்று குறிப்பிட்டு இருந்தேன். இந்த வழக்கை நான் அறிவிப்பு கொடுத்த நாளில் இருந்து எவ்வளவு நாள் கழித்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் 2019-ம் ஆண்டு தாக்கல் செய்துள்ளேன். ஒரு ஆண்டுக்குள் 250 தென்னைமரங்கள் பட்டு போகாது என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்லி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 அடங்கல் கணிக்கில் சர்வே எண்.831/3, 841 ஆகிய புல எண்களில் மட்டும் தான்

தென்னைமரங்கள் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 அடங்கல் கணக்கில் உள்ள இரண்டு புல எண்களிலும் மொத்த விஸ்தீரணம் 5 ஏர்ஸ்க்கு தான் தென்னை மரங்கள் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 5 ஏர்ஸ் என்பது 12.32 செண்ட் என்று சொன்னால் அது பற்றி எனக்கு சரியாக தெரியாது. 1 ஏக்கர் நிலத்தில் 100 தென்னை மரங்கள் வைக்கலாம், 20 அடி நீளம் 20 அடி அகலத்தில் இடைவெளி விட்டால் 100 தென்னை மரங்கள் வைக்கலாம். 25 அடி இடைவெளி விட்டு தென்மை மரங்கள் வைத்தால் 75 தென்னை மரங்கள் தான் பயிரிடமுடியும் என்றும் 20 அடி இடைவெளி விட்டால் 85 தென்னை மரங்கள் பயிரிடமுடியும் என்றும் நான் வழக்கிற்காக 100 தென்னை மரங்கள் பயிரிடமுடியும் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் சர்வே எண்.840/1, 840/2, 840/3 ஆகிய புல எண்களில் மக்காசோளம் பயிரிடப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் நான் அதில் தென்னைமரங்கள் வைத்திருந்ததை வருவாய்துறை ஆவணங்களில் ஏற்றப்படவில்லை. வா.சா.ஆ.1 ஆவணம் 1427-ம் பசலிக்கான அடங்களல் நகல் என்றால் சரிதான். அதன் முந்தைய பசலி ஆண்டுக்கான அடங்கல் நகலோ அதற்கு பிந்தைய பசலி ஆண்டிற்கான அடங்கல் கணக்கையோ நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் தென்னை மரங்கள் பயிரிடப்பட்டதாக சொல்லப்படும் 2012-ம் ஆண்டுக்கான அடங்கல் கணக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சர்வே எண்.838/1 ல் தென்னை மரங்கள் இருந்ததற்கான எந்த ஒரு ஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் தென்னைமரங்கள் இருந்தது. சர்வே எண்.841ல் உள்ள பொதுக்கிணறை தவிர எனக்கு தனியாக ஒரு ஆழ்துளை கிணறு உள்ளது என்றால் சரிதான். பொதுக்கிணறுக்கும் எனக்கு சொந்தமான ஆழ்துளை கிணறுக்கும் இடையே 100 அடி துாரம் இருக்குமா என்றால் அதை விட அதிகமான துாரம் இருக்கும். தோராயமாக எவ்வளவு அடி துாரம் இருக்கும் என்றால் 150 அடி துாரம் இருக்கும். எனக்கு சொந்தமான ஆழ்துளை கிணறில் பம்பு செட் அமைப்பதற்கு நான் மின் இணைப்பு தனியாக பெறவில்லை என்றால் சரிதான். எனது ஆழ்துளை கிணற்றில் தண்ணீர் உள்ளது என்றால் சரிதான். எனது ஆழ்துளை கிணற்றில் இருந்து நான் தண்ணீர் எடுத்து பாய்ச்சுவதற்கு இந்த பிரதிவாதிகள் எந்தவித ஆட்சேபனையும் செய்யவில்லை என்றால் செய்தார். அதனால் தான் நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன். எனது ஆழ்துளை கிணற்றில் பிரதிவாதி இடையூறு செய்தது குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். ஆனால் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய முறையில் மும்முனை இருவழி திறப்பான் சுட்ச் அமைத்து ஆழ்துளை கிணற்றிற்கு மின் இணைப்பு கொடுக்க ஆட்சேபனை செய்ததால் நான் மாண்புமிகு மதுரை அமர்வில் நீதிப்பேராணை மனு தாக்கல் செய்தேன். அந்த

நீதிப்பேராணை மனுவை நானே திரும்ப பெற்றுக் கொண்டுவிட்டேன் என்றால் சரிதான். கீழமை நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துவிடலாம் என்று வாபஸ் பெற்றேன். அதற்கு பின்னிட்டு அ.வ.எண்.25/2017 மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் ஒட்டன்சத்திரத்தில் தாக்கல் செய்தேன். நான் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை அமர்வில் நீதிப்பேராணை மனுவை தாக்கல் செய்தது அசல் வழக்கு எண்.25/2017 நிலுவையில் இருக்கும் பொழுது தான் நீதிப்பேரானை மனு நான் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தாக்கல் செய்தேன் என்றும் வழக்கிற்காக அசல் வழக்கிற்கு முந்தைய காலகட்டத்திலேயே நீதிப்பேராணை தாக்கல் செய்ததாகவும் கீழமை நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து கொள்ளலாம் என்று அதை நான் திரும்ப பெற்றுக் கொள்ளலாம் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அ.வ.எண்.25/2017 ல் சர்வே எண்.841/1ல் உள்ள பொதுக்கிணறு மற்றும் மின்மோட்டாரில் பம்பு செட்டை பயன்படுத்தி விவசாயம் செய்வதற்கு முறைப்படுத்த கோரி பரிகாரம் கோரி தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அதன் அடிப்படையில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் ஒட்டன்சத்திரம் எனக்கு உள்ள பாக உரிமையான 5/6 பாகத்திற்கு 5 நாட்கள் தண்ணீர் பாய்ச்சிகொள்ளலாம் என்றும் பிரதிவாதிக்கு 1/6 பாகத்திற்கு ஒரு நாள் தண்ணீர் பாய்ச்சி கொள்ளலாம் என்று தீர்ப்பு வழங்கி தீர்ப்பாணை வழங்கப்பட்டது என்றால் சரிதான். கீழமை நீதிமன்றம் பிறப்பித்தத தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை எதிர்த்து மேல்முறையீட்டு வழக்கு எண்.90/2022ம் கடந்த 09.02.2024-ம் தேதி மேல்முறையீட்டு நீதிமன்றம் கீழமை நீதிமன்தறத்தின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை உறுதி செய்தது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை தான் மேல்முறையீட்டு நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை என்றால் சரிதான். அது பி.வா.சா.ஆ.2 மற்றும் பி.வா.சா.ஆ.2. ஒரு தென்னை மரத்தில் ஒரு வடத்திற்கு ரூ.2000 வருமானம் வரும் என்று பிராதில் சொல்லியுள்ள நான் அதை நிரூபணம் செய்வதற்கு நிபுணத்துவம் பெற்றவரிடமிருந்து ஏதேனும் அறிக்கை பெற்று தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. தேங்காயை தவிர தென்னை மரத்தில் உள்ள இதர பொருட்கள் மூலம் வருடத்திற்கு எவ்வளவு வருமானம் வரும் என்பதை நிரூபணம் செய்வதற்கு உரிய நிபுணத்துவரிடமிருந்து ஆவணம் பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்களின் வழியாக வருடத்திற்கு இவ்வளவு வருமானம் வந்தது என்பதை நிரூபணம் செய்வதற்கு வருமான வரி கணக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நிலம் குறைவாக இருந்ததால் வருமானம் வரி கணக்கை தாக்கல் செய்யவில்லை. நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் அ.வ.எண்.25/2017 பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையும் அதன் பேரில் பிறப்பிக்கப்பட்ட மேல்முறையீட்டு தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை குறித்து நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ஆனால் அ.வ.எண்.25/2017ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு

எனக்கு நன்றாக தெரியும் என்றால் சரிதான். அந்த நிரூபண வாக்குமூலத்தில் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை மறுத்து நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிராதிலும் நிரூபண வாக்குமூலத்திலும் வழக்கறிஞர் அறிவிப்பிலும் பிரதிவாதிகள் எத்தனை நாட்கள் தண்ணீர் பாய்ச்சவிடாமல் தடுத்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ஆனால் பல நாட்கள் தடுத்ததால் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை. ஒரு தென்னை மரம் தண்ணீர் பாய்ச்சாமல் இருந்தால் எவ்வளவு நாட்கள் உயிருடன் இருக்கும் என்றால் நிலத்தின் தன்மையை பொறுத்து 6 மாதம் முதல் 7 மாதம் வரை உயிருடன் இருக்கும். அந்த 6 மாதம் முதல் 7 மாதம் காலத்தில் பிரதிவாதி தண்ணீர் பாய்ச்ச விடாமல் இடையூறு செய்தார் என்று காவல் நிலையத்தில் புகாரோ வழக்கறிஞர் அறிவிப்போ கொடுத்தேனா என்றால் புகார் கொடுக்கவில்லை. ஆனால் வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தேன். தென்னைமரங்கள் பயிரிடப்பட்டதாக குறிப்பிடும் நிலம் வெயில் காலங்களில் ஓராண்டு காலத்திற்குள் (விரிவோடாது) வெடிப்பு ஏற்படாது. தாவா சொத்தில் உள்ள மண் வண்டல் மண் கலந்த கரிசல் மண், செம்மண்ணும் கலந்துள்ளது. நான் விவாசயம் தவிர்த்து வேறு வேலை செய்து வருகிறேன் என்றால் சரிதான். தவணை முறையில் பொருட்களை கொடுக்கும வியாபாரம் செய்து வருகிறேன். அந்த பணியை நான் உத்தமபாளையத்தில் செய்து வருகிறேன் என்றால் சரிதான். அதிகமான காலங்களில் தவனை முறையில் பொருட்களை கொடுக்கும் வியாபாரம் செய்து வருகிறேன் என்றால் ஒரு வாரத்திற்கு நான்கு நாட்கள் தவணை முறையில் பொருட்கள் வியாபாரம் செய்து வருகிறேன். 3 நாட்கள் விவசாயம் செய்து வருகிறேன். தென்னை கன்று பயிரிடுவதற்கு முன்பு இந்த மண்ணில் என்ன விவசாயம் செய்தால் பலன் கிடைக்கும் என்று மண்ணின் தன்மையை ஆராய்ந்து நான் வேளாண்துறை அலுவலரிடம் அறிக்கை பெற்றேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சர்வே எண்ணில் உள்ள மண் வெயில் காலத்தில் விரிவோடாது என்று சொல்லும் நான் தென்னை மரங்கள் காய்ந்து விட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாவாவில் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. ஒரு ஏக்கரில் எவ்வளவு தென்னை மரங்கள் பயிரிட வேண்டும் என்ற முறையே தெரியவில்லை என்றும் பிரதிவாதியின் நிலத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்திலும் மும்முனை இருவழி திறப்பான சுட்ச்சை அமைப்பதற்காகவும் பொய்யான காரணங்களை கூறி இந்த பிரதிவாதிக்கு எதிராக இந்த வழக்கை தாக்கல் செய்து அதற்கு ஆதாரவாகவும் பொய்யாக சாட்சியம் அளித்து வருகிறேன் என்றால் சரியல்ல.

M DHANABAL
Digitally signed by M DHANABAL
Date: 2025.03.05 10:11:56 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்